**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක - 243**

**ආයතනයේ නම - මෝටර් රථ ප්‍රවාහන දෙපාර්තමේන්තුව**

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා
සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ
නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 243

நிறுவனத்தின் பெயர் - **மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

பாராளமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முனவைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் **119 (4)** இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

## Parliamentary Series Number - 243

## Name of the Institution - Department of Motor Traffic

Submission of observations of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee On Public Accounts in terms of standing order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் – 243

நிறுவனத்தின் பெயர் - மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

| குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | | குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | • கணக்காய்வு வினா மூலம் 2014 ஆம் ஆண்டு நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, எனினும் 2019 ஆம் ஆண்டு வரை பதில் கிடைக்கப்பெறாத, "மத வழிபாட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 158 வாகனங்களினது உரிமப்பத்திரதாரர்களின் பெயர்கள் அல்லது உரிமம் தொடர்பான உரிமை மாற்ற நிபந்தனைகளை மாற்றியவாறு வாகனங்களை பதிவுசெய்திருத்தலும் 120 வாகனங்களின் உற்பத்தி வருடத்தை மாற்றியவாறு பதிவுசெய்யப்பட்டிருத்தலும்" என்ற விடயத்தினையும் உள்ளடக்கியதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முன்னைய 25 பரிந்துரைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்களை, 2019.10.23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலும் விசாரணைக்கு உட்படுத்தி, அக்குழுவினால் | • ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் கணக்காளர் சேவையின் ஓய்வுபெற்ற விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>• குற்றப் புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளுக்குரிய அறிக்கையொன்றைப் பெற்று அரச கணக்குகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இதுவரை நேர்மறையான நடவடிக்கை மேற்கொள்ளாமை.<br><br>• இது தொடர்பாக, 2020 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட திணைக்கள விசாரணையின் போது, அப்போது இருந்த க.அ. இனால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட 118 கோவைகள் மீதான விசாரணை அறிக்கையைப் பெற்று அந்த விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து செயற்குழுவிடம் அறிக்கையிடுமாறும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. ரிடம் பரிந்துரைக்கப்பட்டது. | |
| 2. | • கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2023.09.12 ஆம் திகதிய விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக திணைக்களம் மேற்கொண்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கையின் முன்னேற்றம்.<br><br>• இந்த நோக்கத்திற்காகத் திணைக்களத்திற்குள் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் தாபனவிதிக் கோவையின் | • ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் கணக்காளர் சேவையின் ஓய்வுபெற்ற விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஆகியோர் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>• போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் |

| | | |
|---|---|---|
| | விதிமுறைகளுக்கமைய குழுவின் கடமைகளை நிறைவேற்றத் தவறியமை குறித்து அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு மூன்று வாரத்திற்குள் செயற்குழுவிடம் அறிக்கையிடுமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பி.க.அ. இற்கும் விதப்புரை வழங்கப்பட்டது. | விமான சேவைகள் அமைச்சினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்விசாரணை அறிக்கை அரச கணக்குகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 3. | • அவி/16/1307/709/061 ஆம் இலக்க 2016 செப்தெம்பர் 07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சட்டபூர்வமான சுங்க நடவடிக்கைமுறை இன்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கில்களை, அவற்றின் எரிபொருள் கொள்ளளவை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு உட்பட்டு பதிவுசெய்யும்போது இடம்பெற்றுள்ள முறைகேடுகள். | • இது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு, அரச கணக்குகள் குழுவிடம் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 4. | • 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் நிதியாண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கிய விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மீளாய்வு.<br>திணைக்களம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கிய 18 விடயங்கள் மற்றும் 8 விடயங்கள் தொடர்பில் முறையே ஆராய்ந்து கருத்தில் | • இது தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்காகப் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் புலனாய்வுப் பிரிவிலிருந்து புலனாய்வு உதவியாளர்களைக் கொண்டு அமையப்பெற்ற குழு நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | கொண்ட செயற்குழு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களூடாக பாரிய நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என்று முடிவு செய்தது. | |
| 5. | • சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் | • இது தொடர்பான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை அரச கணக்குகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 6. | • குழுவின் பொது விதப்புரைகள்<br>✓ திணைக்களத்தில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு அரசாங்க நிறுவனங்களில் தற்போதுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை முறைகளுக்கமைவாகத் தண்டனைகளை விதிப்பது கட்டாயம் என்பதுடன் அதற்குரிய ஒழுக்காற்று அலுவலரால் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்வது கட்டாயம் எனவும்,<br>✓ அனைத்துத் திணைக்களச் சோதனைகளுக்காகப் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் பி.க.அ. உடைய சாதகமான தலையீடும் | • விசாரணை நடத்தப்பட்டு அடையாளம் காணப்பட்ட குற்றவாளிகள் மீது குழுவின் விதப்புரைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்பார்வையும் இருத்தல் வேண்டும் எனவும்,<br>✓ ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் குற்றவியல் தவறுகள் தொடர்பாக நாட்டிலுள்ள சட்டத்திற்கமைவாக நீதிமன்ற நடவடிக்கை ஊடாகத் தண்டணை வழங்கப்படல் வேண்டும் எனவும்,<br>✓ கணக்காய்வு அறிக்கைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள மற்றும் குழுவின் முன்னிலையில் தெரியவரும் குற்றவியல் தவறுகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை நிறைவேற்றுவதன் மூலம் குறுப்பிட்ட அறிக்கையைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்திச் சட்டத்தை வலியுறுத்தும் நிறுவனங்கள் மூலமாக குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை விதிக்க வேண்டும் எனவும். | |

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க (பா.உ.)**

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும்

சிவில் விமான சேவைகள் அமைச்சர்